**தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில்**
**2021-22-ம் ஆண்டுக்கான முதுநிலை மீன்வள பட்ட படிப்புகளுக்குக்கான மாணவர் சேர்க்கை**

முதுநிலை மீன்வள பட்ட படிப்புகளுக்கு விண்ணப்பிக்க பல்கலைக்கழக துணைவேந்தர் அழைப்பு

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழத்தில் 2021-22ம் கல்வி ஆண்டிற்கான முதுநிலை மற்றும் முனைவர் பட்ட படிப்புகளுக்கான இணையதள விண்ணப்பங்கள் 28.10.2021 அன்று வெளியிடப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் முதுநிலை படிப்புகள் மீன்வள அறிவியல் (13 பாடப்பிரிவுகள்), மீன்வளப் பொறியியல் (2 பாடப்பரிவுகள்), வணிக நிர்வாகவியல் (மீன்வள வணிக மேலாண்மை) மற்றும் முனைவர் பட்டப்படிப்புகள் மீன்வள அறிவியலில் (13 பாடப்பிரிவுகள்) வழங்கப்பட்டு வருகின்றன. இந்த கல்வி ஆண்டில், இந்திய மாணவர்களுக்கு முதுநிலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்பில் 56 இடங்களும், முதுநிலை மீன்வளப் பொறியியல் பட்டப்படிப்பில் 6 இடங்களும், முதுநிலை வணிக நிர்வாகவியல் (மீன்வள வணிக மேலாண்மை) பட்டப்படிப்பில் 30 இடங்களும் மற்றும் முனைவர் பட்டப்படிப்பில் 35 இடங்களும் நிரப்பப்பட உள்ளது. அதுமட்டுமல்லாமல், வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு 10 இடங்களும், மற்றும் வெளிநாட்டிவர்களுக்கு 3 இடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன.

இப்பல்கலைக்கழத்தில் முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்புகளில் சேர்ந்து பயில 28.10.2021 தேதி முதல் பல்கலைக்கழக இணையதளம் (www.tnjfu.ac.in) மூலம் விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய கடைசி நாள் 28.11.2021 ஆகும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் தபால் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை.

விண்ணப்பித்த மாணவர்களுக்கு தகுதித் தேர்வு மற்றும் நேரடி கலந்தாய்வானது 09.12.2021 மற்றும் 10.12.2021 ஆகிய தேதிகளில் பொன்னேரியில் உள்ள டாக்டர் எம்.ஜீ.ஆர் மீன்வளப் பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வைத்து நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் பிற தகவல் மற்றும் விபரங்கள் அறிய பல்கலைக்கழகத்திற்கு தொலைபேசி (04365-256430) அல்லது செல்லிடைபேசி (9442601908) மூலமாக, அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

தலைவர்,
மாணவர் சேர்க்கைக் குழு